பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 15 (29—1—68) திங்கள் ★ வெளியூர்: தை 16 (30—1—68) செவ்வாய் [இதழ்: 188

## காலத்தால் மிக மிகப் பிந்திய மொழி இந்தி!

"இந்தியில் இலக்கணம் போதிய அளவு இல்லை; எனவே இந்தியை நாம் ஏற்றுக்கொண்டு அதற்கு இலக்கணம் வகுக்க வேண்டும்.

"இந்தி மொழி சொல் வளம் பெற்ற மொழியல்ல; எனவே, இந்தியை வளம் பெறச்செய்ய இதர மொழிகளிலிருந்து சொற்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

"தென்னக மொழிகள் பழமையானவை; இலக்கண - இலக்கிய வளமுள்ளவை; இந்த மொழிகளுடன் இந்தியை ஒப்பிடும்போது, குடும்பத்திலேயே இளைய மகளாகத்தான் இந்தியைக் கருத வேண்டும்! காலத்தால் மிகமிகப் பிந்திய மொழி இந்தி!"

—நிஜலிங்கப்பா
(அ.இ.கா. தலைவர்)

# ஏழைகளின் வாழ்வு மலரக் காங்கிரசு பணியாற்றியதா?

# ஒரு கவளச் சோற்றுக்கு மக்கள் ஆலாய்ப் பறக்கும் நிலை மாறிற்றா?

## இருபதாண்டுச் சுதந்தர ஆட்சியில் கண்ட பலன் என்ன?

### இந்தியா--சோவியத் பண்பாட்டு மாநாட்டில் முதலமைச்சர் அண்ணா உரை

குண்டூர், சன. 29 —

"இந்த நாட்டின் ஆளுங் கட்சியாக இருந்துவரும் காங்கிரசு, 'இந்நாட்டு மக்களின் வறுமையை ஒழிக்க வேண்டும்' என்ற தனது இலட்சியத்தை நிறைவேற்றக்கூடியவகையில் இயங்கவில்லை!

"நாட்டுக்கு விடுதலை கிடைத்து இருபதாண்டுகள் கடந்தும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியும், நம்மால் முடிந்ததையெல்லாம் சாதாரண எளிய மக்களுக்குச் செய்து தந்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய நிலையில்—நம்முடைய மனச்சான்றே நமக்கு இடம் கொடுக்கவில்லை!

"ஒரு கவளச் சோற்றுக்கு ஆலாய்ப் பறக்கின்ற கோடிக் கணக்கான மக்களையும், அதே நேரத்தில் உல்லாச வாழ்வு அனுபவிக்கும் செல்வச் சீமான்கள் சில பேரையும் கொண்ட வினோதமான நாடு இந்தியா!

"பொதுமக்களின் குறைந்த அளவு தேவையைக்கூட நிறைவு செய்ய முடியவில்லை என்றால், எவ்வளவு அதிக அளவில், உற்பத்திப் பெருக்கக் கணக்கைக் காட்டினாலும் பயனில்லை!

"நமது முயற்சிகளெல்லாம், மக்களை அடிமை நிலையிலிருந்து விடுவிக்கவும், வெறுப்புணர்ச்சியிலிருந்து நட்புணர்ச்சிக்கு மாற்றவும், வறுமையிலிருந்து செல்வ நிலையை எட்டவும் செய்யக்கூடியதாக அமைய வேண்டும்"

இவ்வாறு, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு நடந்த இந்தோ—சோவியத் பண்பாட்டுக் கழக எட்டாவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மிக உருக்கமுடன் குறிப்பிட்டார்கள்.

ஆங்கிலத்தில் நிகழ்த்திய இந்த உரையை ஆயிரக்கணக்கில் குழுமியிருந்த மக்கள் மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். தாய்மார்கள் கையில் குழந்தையுடன் அமைதியாக இருந்து, பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அண்ணா அவர்கள் உரையாற்றுகையில், இடையிடையே கையொலி ஆரவாரம் செய்து மக்கள் வரவேற்றனர்.

## சிவசேனா காலிகள் அட்டகாசம்!

### அண்ணாவுக்கு எதிரான முழக்கமிட்டுப் பெயர்ப் பலகைகளைத் தாக்கினர்

பூனா, சன. 28—

இங்கு 'ரஸ்தபேத்' என்ற பகுதியில் உள்ள தென்னிந்தியர்களின் சங்கம் ஒன்றின் பெயர்ப் பலகையைத் தாக்கிச் சுமார் 40 பேர் ஆர்ப்பாட்டம் செய்ததைத் தொடர்ந்து 4 பேர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தினர் சிவசேனை முழக்கங்களையும், அறிஞர் அண்ணாவுக்கு எதிரான முழக்கங்களையும் முழங்கி ஆர்ப்பாட்டம் செய்ததாகப் போலீசு தகவல் கூறுகிறது.

கிர்க்கி, கோர்புரி, தபோடி ரெஸ்த்பேத் ஆகிய வட்டாரங்களில் உள்ள திரைப்பட அரங்குகளில், தென்னிந்தியத் திரைப படங்களைத் திரையிடக்கூடாது என்று மொட்டைக் கடிதமூலம் யாரோ சிலர் எச்சரிக்கை செய்திருந்ததால், அந்த அரங்குகளில் திரைப்படக் காட்சிகள் நிறுத்தப்பட்டதாகப் போலீசார் கூறினர்.

### பண்பாட்டுத் துறையில் ஒன்றுபட்டு இயங்கத் தென்னக மாநிலங்களுக்கு அன்பழைப்பு

## 'ஆந்திர கேசரி'யின் உருவச் சிலை

### சென்னையில் நிறுவத் தமிழக அரசு முடிவு

### குண்டூர் நகராட்சி வரவேற்பில் அறிஞர் அண்ணா அறிவிப்பு

குண்டூர், ஜன. 28—

ஆந்திர மக்களின் மரியாதைக்குரியவராகத் திகழ்ந்த பழம் பெரும் தலைவரும், நாட்டு விடுதலைக்கு அரும்பாடுபட்டவர்களில் ஒருவரும், 'ஆந்திர கேசரி' என்று புகழப்பட்டவரும், முன்னாள் சென்னை மாநில முதலமைச்சருமான திரு. டி. பிரகாசத்தின் திருவுருவச் சிலையை சென்னை உயர் நீதிமன்றத்தின் முன் நிறுவிடத் தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு அறிவித்தார்கள்.

குண்டூர் நகராட்சிமன்றம் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"உள்ளாட்சிமன்றங்கள் மேலும் திறமையாக இயங்க வேண்டுமானால், போதிய பண வசதி தேவை. இந்த நோக்கத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டு அரசு, ஒரு குழுவை ஏற்படுத்தி, நகராட்சிமன்றங்கள் கூடுதலான அதிகாரங்களையும், வருவாய் அதிகரிப்புக்கான வழிவகைகளையும் பெறுவதற்கான வகையில் இப்பொழுதுள்ள நகராட்சிகள் சட்டத்தை ஆராய்ந்து திருத்தம் செய்ய எண்ணியுள்ளது.

"தமிழகம் — ஆந்திரம் — கேரளம்—கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்களும் அரசியலில் தனி அமைப்புகளாக இருந்த போதிலும், பண்பாட்டுத் துறையில் ஒன்றுபட்டவையாகும்; எனவே, இந்த நான்கு மாநிலங்களும், பண்பாட்டுத் துறையில் ஓரமைப்பாக இயங்குவதில் தடையேதும் இருக்கும் என்று தோன்றவில்லை."

நகராட்சித் தலைவர் சி, அனுமந்தையா (எம்.எல்.ஏ.) வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

# இன்று மட்டுமல்ல--என்றுமே கூடாது

## 'என்றாவது ஓர் நாள் இந்தி ஆட்சிமொழியாகும் என்ற நம்பிக்கை வேண்டாம்'

### இந்தித் திணிப்பாளர்கட்கு அறிஞர் அண்ணா திட்டவட்டமான அறிவிப்பு

#### இந்தி பேசாத மக்களின் எதிர்காலம் குறித்து ஆந்திரப் பெருமக்களிடையே முழக்கம்

குண்டூர், சன. 29—

"'இந்தி என்றேனும் ஓர் நாள், ஆட்சிமொழியாக ஆகியே தீரவேண்டும்' என்ற மனப்போக்கை இந்திக்காரர்கள் கைவிட்டுவிட வேண்டும்; இன்னும் 50 ஆண்டுகள் கழித்து இந்தி வந்தாலும், இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியே விளையும்!

"இந்தியாவின் ஒற்றுமையை நான் விரும்புகிறேன்; ஆனால், நாட்டின் ஒரு பகுதி மக்கள், ஏனைய பகுதி மக்களின்மீது ஆதிக்கம் செலுத்தி, அதன்மூலம் ஒற்றுமையை ஏற்படுத்த நினைக்கக்கூடாது! அவசரப்பட்டுச் சில சட்டங்களை நிறைவேற்றி விடுவதால் இந்த ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது!

"இந்தியை மட்டும் ஆட்சிமொழி ஆக்குவதன் மூலம் நாட்டின் ஒற்றுமை மிகவும் பாதிக்கப்பட்டுவிடும்; ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், நாட்டின் ஒவ்வொரு பகுதியும் அதற்காக ஏதாவது செய்வதுடன், சிறிது தியாகமும் செய்ய முன்வருவது அவசியம்.

"இந்திக்காரர்கள் தங்கள் போக்கை மாற்றிக்கொண்டு, பிற மொழி பேசுவோரின் உரிமைகளை மதித்து நடக்கவேண்டும்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், குண்டூர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அறிவுறுத்தினார். இத்தொடர்பில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்தியா ஒன்றுபட்டு, வெல்லற்கரிய வலிமையுடன் கூடியதாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன்; ஆனால், ஒருவரையொருவர் 'அடிமை' என்று கருதாமல், அனைவரும் தோழர்களாக வாழ வேண்டும்.

"பல மொழிகளையும்--பண்பாடுகளையும் கொண்ட ஒரு இந்தியாவை நான் நம்புகிறேன். 'ஒரே நாடு' என்கிற நிலைமைக்கு நாம் இன்னும் உயரவில்லை; அமெரிக்கா அந்த நிலையை அடைய 200 ஆண்டுகள் ஆயிற்று; அது, கடினமான பாதை; ஆகவே, நாம் ஒருவரையொருவர் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

"நாடு முழுவதிலும் பரவலாகப் போராட்டங்களும், சட்டத்தை மீறுகின்ற கிளர்ச்சிகளும் நடைபெறுவதற்குக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

"சட்டம் இயற்றுவதற்குப் போதிய தகுதி இல்லாதவர்களைக் கொண்டு சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் சட்டங்கள் இயற்றப்படுகின்றன; அந்தச் சட்டங்கள், அவசரக் கோலத்திலும்—அரசியல் காரணங்களுக்காகவும் நிறைவேற்றப்படுகின்றன; இதனால், தங்கள் நலன்களுக்குப் பாதகமாக உள்ள சட்டங்களை மீறுவதற்கு மக்களுக்கு வழி ஏற்பட்டுவிடுகிறது.

"வன்முறைச் செயல்களை நான் ஆதரிக்கவில்லை; என்றாலும், ஒழுங்கான சமூக வளர்ச்சிக்கு வழி ஏற்படும் சட்டங்களைத்தான் நான் விரும்புகிறேன். மக்கள் நலனுக்கு உரியதாக இல்லாத சட்டங்கள், புறக்கணிக்கப்படத்தான் வேண்டும்."

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 தை 15 (29—1—68) திங்கள்

# இனியும் தேவைதானு?

இந்தி மொழி இனி தமிழகப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட மாட்டாது எனச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கொப்ப, இந்திப் பயிற்சியைப் பள்ளிகளிலிருந்து உடனடியாக நீக்கிவிடத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துவிட்டது. இந்த ஆணைக்கேற்ப, பள்ளிகள் திறக்கப்பட்டதும் இந்தி மொழிப் போதனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும்.

இந்தி மொழியைக் குறித்துத் தமிழக அரசாங்கம் செய்திருக்கின்ற இம்முடிவு, தமிழக மாணவர்கள் விரும்பியதற்கும் கூடுதலாக அமைந்திருக்கிறது. இதை மாணவர்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தி மொழியைக் குறித்துத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கின்ற இம்முடிவை அடிப்படையாகக் கொண்டு, இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் தமிழக அரசு எந்த எல்லைக்குச் செல்லத் தயாராக இருக்கிறது என்ற உண்மையை மாணவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதுவுமன்றி, 'இந்தி நெடிநாற்றமே தமிழகத்தில் இருந்திடக் கூடாது' என்பதற்காக, 'என்.சி.சி.', 'ஏ.சி.சி.' போன்ற மாணவர் படைப் பயிற்சி அணிகளிலும் இந்திக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்தக்கூடாது எனத் தமிழக அரசு செய்திருக்கின்ற தீர்மானத்தையும் நுணுகி ஆராய்ந்து, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதிலும், தடுத்து நிறுத்துவதிலும் தமிழக அரசுக்கு இருந்திடக்கூடிய நல்லெண்ணத்தையும், அக்கறையையும், மாணவர்கள் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடுவதில், தான் எடுத்துக் கொண்டிருக்கின்ற தீவிரமான நடவடிக்கைகளுக்காகத் தன்னையே பலியிட்டுக் கொள்ளக்கூட இன்றையத் தமிழக அரசு ஆயத்தமாக இருக்கிறது என்ற உண்மையை, ஒளிவுமறைவு இல்லாமல் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் அறிவித்திருப்பதையும் மாணவர்கள் கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

அரசு கட்டில் பெரிதல்ல— அரிய இலட்சியம்தான் பெரிது— காப்பாற்றிக் கொள்ளப்பட வேண்டியது — என்ற விழுமிய கொள்கையுடன் கூடிய அரசு, அறிஞர் அண்ணுவை முதலமைச்சராகக் கொண்டு இன்று தமிழகத்தில் இயங்கிவருகின்ற அரசு என்பதையும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

தங்கள் குறிக்கோளைச் செயல்படுத்தத் துணிந்திருக்கின்ற அரசுதான் தமிழக அரசு என்ற உண்மை, கல்லில் செதுக்கிய எழுத்தாகிவிட்டிருக்கிறது.

அரசுப் பதவி — அதினினும் உயர்வான உயிர் — ஆக எதையும் பலிகொடுத்து இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிப்பது எனத் துணிந்து செயல்படக்கூடிய அறிஞர் அண்ணு அவர்களையும் —அவரை ஒத்தவர்களையும் கொண்டிருப்பதுதான் தமிழக அரசு என்பது இன்றும் என்றென்றும் நிலைத்து நிற்கின்ற உண்மையாகி விட்டிருக்கிறது.

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்ற போர்க்களத்தில், முன்னணியிலிருந்து வீரப் போர்புரியும் பெரும் படையாகத் தமிழக அரசு தன்னை மாற்றிக் கொண்டுவிட்டிருக்கிறது.

செய்த முடிவை மாற்றிக்கொள்ளுமோ—முன்வைத்த காலை பின்வாங்கிக்கொள்ளுமோ என்ற அச்சம், தமிழக அரசைப் பொறுத்தவரையில் எவருக்கும் இருக்க முடியாது—குறிப்பாக, மாணவர்களுக்கு ஒருகாலும் இருந்திட முடியாது.

இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பானது, மாணவர்கள்—தனி நபர்கள்—பொதுமக்கள் என்ற நிலையிலிருந்து, மாநில அரசே முழுமூச்சாக எதிர்ப்பது என்ற—இன்றுவரை எந்த மாநில அரசும் மேற்கொள்ளத் துணியாத—மேற்கொள்ளப்பட்டில்லாத ஒரு பெரு நிலை -- ஒரு புது நிலை, இன்று தமிழகத்தில் உருவாகிவிட்டிருக்கிறது.

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பது மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும்தான் சொந்தம்—பொறுப்பு என்ற நிலை, இன்று தலைகீழாக மாறிவிட்டிருக்கிறது.

இதுவரையில் மாணவர்களும், மற்றவர்களும் ஏற்றிருந்த அப்பொறுப்பை—அப்பெரும் கடமையை, இன்று தமிழக அரசே ஏற்றுக்கொண்டுவிட்டது என்ற சிறப்பான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியை எதிர்ப்பதில் மாணவர்கள் ஆற்றிவந்த கடமையை —ஏற்றிருந்த பங்கை—தமிழக அரசு உரிமை பாராட்டி ஏற்றுக் கொண்டுவிட்டிருக்கிறது என்பதுதான், இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு வந்து அடைந்துள்ள புதுக்கட்டம்.

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தூள்தூளாக்கத் தமிழக அரசே களம் அமைத்துக் கொண்டுவிட்ட பின்னர், அப்போர்க் களத்தில் இனியும் மாணவர்கள் ஈடுபட வேண்டியது தேவைதானு? நியாயந்தானு? முறைதானு?

இந்தித் திணிப்பை எதிர்ப்பது என்ற பெயரால், இனியும் மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதை மறந்து—கல்வி கற்பதை விடுத்து, 'கிளர்ச்சி, கிளர்ச்சி' எனக் காலங்கழித்துக் கொண்டிருக்கலாமா? இது தேவைதானு? நியாயந்தானு? முறைதானு?

எது தேவை? எது நியாயம்? எது முறை?

கிளர்ச்சியைக் கைவிட்டு, பெறவேண்டிய கல்வியைப் பெறக் கல்விக்கூடங்களுக்குத் திரும்புவதா? அல்லது கிளர்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருப்பதா?

கல்விக்கூடங்களுக்குச் சென்று, முறையாகக் கல்வியைக் கற்பதுதான் மாணவர்களின் கடமை—மாணவர்களின் பணியும் அதுதான்.

உண்மையைத் தெரிந்துகொள்ளும் அறிவாற்றல் பெற்றிருப்பவர்கள் மாணவர்கள்—அதிகம் சொல்லத் தேவை இல்லை—கல்விக் கூடங்களுக்கு அவர்கள் உடனடியாகத் திரும்புவர் என்பது உறுதி.

—கா.க.

## விவரம் புரியாமல் 'வீரம்' பேசுகிறர் !

கே. விநயகம் (காங்):—"அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வது இயலக்கூடியதன்று; அதற்கேற்ற சூழ்நிலை இப்போது இல்லை; அரசியல் சட்டத்தைத் திருத்தும் உங்கள் கொள்கையை நீங்கள் வற்புறுத்தவில்லை."

முதலமைச்சர்:—"மூன்றில் இரண்டு பங்கினராக நீங்கள் பெரும்பான்மை எண்ணிக்கையுடன் இருந்திருந்த காலத்தில், அரசியல் சட்டத்தைத் திருத்துமாறு நாங்கள் கேட்டிருந்தால், நீங்கள் ஆதரித்திருப்பீர்களா?"

கே. விநயகம்:—"ஆதரவு கொடுத்திருப்போம்."

முதலமைச்சர் :—"கேட்டோம்; நீங்கள் ஆதரிக்கவில்லை."

—சட்டமன்றத்தில் : 23—1—68

## இன்பக்கனவுகள் நனவான நாள் !

சென்னை, சன. 27—

"'இனி இந்தி இல்லை—மும்மொழித் திட்டம் இல்லை' என்ற தீர்மானத்தைச் சட்ட மன்றத்தில் நான் படித்த போது, என்னுடைய உள்ளத்தில் பழைய நினைவுகளெல்லாம் பொங்கிக் கொந்தளித்தன! அணுதைப் பிள்ளைகளாக நாங்கள் இந்தியை எதிர்த்து அலைந்த காட்சிகள், என் நினைவுக்கு வந்தன! எங்களால் மட்டுமே அந்த மகிழ்ச்சியை உணர முடியும்!

"தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுக்காலமாக இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட தியாகமெல்லாம் ஒரு வடிவமெடுத்து வெற்றியைத் தேடித் தந்த நிலை இது! அந்த நாள்தான், எங்கள் இன்பக் கனவுகள் நனவான நாள்!

"என்னுடைய வாழ்க்கையில் —ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்—நான், மூன்று முறை மகிழ்ச்சியடைந்தேன்—

**முதன் முதலில்—இந்த நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டி — அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி— கட்சிப் பாகுபாடு இன்றி அனைவரும் சட்டமன்றத்தில், 'தமிழ்நாடு வாழ்க' என்று முழக்கம் செய்தபோது, என் 58 ஆண்டுக் காலத்திலும் கேட்டறியாத கீதத்தை—செவியில் பாயாத செந்தேனை — பார்த்தறியாத காட்சியை நான் உணர்ந்தேன்.**

**இரண்டாவதாக — சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தபோது மகிழ்ந்தேன்!**

**மூன்றாவதாக—'இனி தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி இல்லை' என்று அறிவித்தபோது மகிழ்ந்தேன்!''**

---அறிஞர் அண்ணு

(வீர வணக்க நாள் கூட்டத்தில்)

## சிறு சேமிப்புக் கலை விழா ஒத்திவைப்பு

சிறு சேமிப்பு நிதிக்காக, சென்னை நேரு அரங்கத்தில் இத்திங்கள் 27-ம் நாள் நடக்கவிருந்த கலை நிகழ்ச்சி, தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது; அடுத்த தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

சனவரி 27-ம் நாள் நிகழ்ச்சிக்காக வாங்கப்பட்ட டிக்கெட்டுகள் அடுத்த தேதிக்குச் செல்லுபடியாகும்.

## கரும்புக்கான ஒருமுனை வரி

கரும்புக்கு இறுதி கொள் விலையில், 1959-ம் ஆண்டு சென்னை பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் ஒருமுனை வரி விகிதம், 4 சதவிகிதத்திலிருந்து சதவிகிதமாக 1968 சனவரி 25-ம் நாளிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

## 'காலியாக வைத்திருக்கும் நிலத்தை கல்விப் பணிக்கு அளியுங்கள்'

### நகரில் உள்ள மாளிகை வாசிகளுக்கு அமைச்சர் வேண்டுகோள்

சென்னை, சன. 29—

"பெருநிலப் பரப்போடுகூடிய மாளிகையில் வசிக்கும் செல்வர்கள், தங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் வெற்றிடமாக இருக்கும் அந்த நிலப்பரப்பின் ஒரு பகுதியையாவது பள்ளிகளுக்கு நன்கொடையாக வழங்க வேண்டும்; நன்கொடையாக வழங்க மனமில்லையென்ருல், விலைக்காவது விற்க முன்வர வேண்டும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை பெரியமேட்டில் உள்ள டாக்டர் அம்பேத்கார் நகர் மாநகராட்சி உயர் துவக்கப் பள்ளிக்கான துணைக் கட்டிடத்திற்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டுவித்துப் பேசுகையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்தக் கால்கோள் விழா மேயர் அபிபுல்லா பேக் தலைமையிலும்— ஆர். எஸ். தர்பி முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநகராட்சி உறுப்பினர் ச. கன்னியப்பன் அனைவரையும் வரவேற்ருர்.

வட்டக் குழுத் தலைவர் அ. கண்ணனும் உரையாற்றினர்.

ஆணையர் அம்பாசங்கர் நன்றி கூறினர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அரசும், மாநகராட்சிமன்றங்களும் சேர்ந்து ஆண்டுக்கு மொத்தம் ரூ. 59-கோடிக்குமேல் கல்விக்காகச் செலவிகின்றன; இதனைத் தவிர, தனிப்பட்ட நிறுவனங்கள்மூலம் வேறு கல்விக்குச் செலவிடப்படுகிறது; இத்துணை இருந்தும், நூற்றுக்கு நாற்பதுபேர்தாம் கல்வியறிவு பெற்றிருக்கிருர்கள்; எஞ்சியுள்ள 60-பேர்களையும் கல்வியறிவுள்ளவர்களாக்கும் கடமை அரசுக்கு இருக்கிறது.

"தொடக்கப் பள்ளிகள் அந்தந்த வட்டாரத்திலேயே இருக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் சிறிது தொலைவில்கூட இருக்கலாம்.

"அதிகமான அளவில் தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்த, நகரில் போதிய இடம் கிடைப்பது அரிதாக உள்ளது. நிலமுடைய செல்வர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்."

## சனவரி 30—

### தியாகிகளுக்கு அஞ்சலி

சென்னை, சன. 28—

சனவரி 30-ம் நாள் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர் ஈந்த தியாகச் செம்மல்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாகும். அன்று காலை 11-மணியிலிருந்து 2-நிமிட நேரம் மக்கள் நாடு முழுவதிலும் மவுனமாக நின்று, வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த இரண்டு நிமிட நேரத்தில் எல்லா அரசு அலுவலகங்களிலும், பிற நிலையங்களிலும் முற்றிலும் வேலை நிறுத்தப்படும். இயலும் இடங்களில் அறிவிப்புக் கொடுக்கப்படும்; அதைக் கேட்டதும், அலுவலகங்கள்—பள்ளிகள் போன்றவற்றில் இருப்பவர்கள் தங்கள் இருக்கைகளில் எழுந்து நின்று அஞ்சலி செலுத்துவார்கள்

நடைமுறையில் இயலும் இடங்களில் எல்லாத் தொழிற்சாலைகளிலும், தொழிற்கூடங்களிலும் வேலை நிறுத்தப்படும்; வானொலி நிலையங்கள் இந்த இரு நிமிட நேரத்துக்கு எதுவும் ஒலிபரப்பா; சாலையில் போக்குவரத்து நிற்கும்; காலை 11 மணிக்குப் புறப்பட வேண்டிய விமானங்களும், கப்பல்களும், இரயில் வண்டிகளும் இரு நிமிட நேரம் அந்தந்த நிலையங்களில் நிறுத்திவைக்கப்படும்.

அஞ்சலி தொடங்கும் நேரத்தையும் முடியும் நேரத்தையும் தெரிவிக்க சென்னை நகரில் கோட்டைக்குள் ஊது கொம்புகள் மூலமும், நகரின் மற்றப் பகுதிகளில் சங்கொலி மூலமும் அறிவிப்பு கொடுக்கப்படும். பிற இடங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவிப்புக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இயன்ற அளவு செய்வர்.

## செய்யவேண்டியதைச் செய்தோம்--- இனி மற்றொரு கடமையை செய்யவிடுங்கள் !

### காங்கிரசுக்காரர்களுக்கு முதலமைச்சர் அறைகூவல் !

சென்னை, சன. 27—

"என் மதிப்புக்குரிய காங்கிரசு நண்பர்களுக்கு கூறிக்கொள்கிறேன்—நீங்கள் எங்களைக் கவிழ்க்க விரும்பினுல் தாராளமாகக் கவிழ்க்கலாம்—எங்கள் வேலை முடிந்துவிட்டதாகக் கருதிக்கொள்கிறேன்; ஆனுல் அப்படியே நீங்கள் கவிழ்த்தாலும், நாங்கள் மூடிவிட்ட இந்தி வகுப்புகளை மீண்டும் திறந்து நடத்தும் துணிவு உங்களுக்கு ஏற்படுமா என்பதையும் பார்ப்போம்! ஏனெனில், தமிழக மக்கள், இப்போது அந்த நிலையில் இருக்கிருர்கள்!

"எந்தச் சமயத்திலும் எங்கள் அமைச்சரவையைக் கவிழ்க்க உங்களுக்கு உரிமை இருக்கிறது; நான் மார்ச் திங்கள் 6-ம் நாள் பதவி ஏற்றபோது, 'என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும்' என்று எண்ணினேனே அவைகளைச் செய்து முடித்துவிட்டேன்; செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடிக்கத் தேவையான வாய்ப்பாகவே பதவியைக் கருதுகிறேம்; 'நிரந்தர அமைச்சர்' என்ற மனப்பான்மையில் நாங்கள் பதவியில்இல்லை!

"இனி எங்களுக்கு மற்றொரு கடமை இருக்கிறது—மக்களுக்கு வயிருர உணவும் போதிய வேலை வாய்ப்பும் அளிக்கவேண்டும்; புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்; அவைகளை முழுவதுமாகச் செய்து முடிக்கும் வரையில் எங்களை விட்டுவிடுங்கள்!

—வீர வணக்க நாள் கூட்டத்தில்

## கிராமப்புற ஆள்பலத் திட்டம்

### ஐந்து வட்டாரங்களில் கலைக்கப்பட்டது

கோவை, சன. 28—

தமிழகத்தில் கிராமப்புற ஆள்பலத் திட்டப் பணிகளை ஐந்து வட்டாரங்களில் (பிளாக்குகள்) கலைத்துவிடுமாறு மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஐந்து வட்டாரங்களிலும் சரியாகப் பணிகள் நடக்கவில்லை என்று கூறப்படுகிறது.

திட்டக் குழு ஆதரவில் உள்ள இந்த ஆள்பலத் திட்டம், மாநிலத்தில் 72 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# அரசினர் கல்லூரிகளில் பயிற்று மொழியாகத் தமிழ்

## ..டுத்தஆண்டே செயல்படுத்துவது பற்றி அமைச்சர் விளக்கம்

மதுரையில் செய்தியாளர்களிடையில், மொழிப் பிரச்சினை ..றிய தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தை விளக்குகையில், ..வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் குறிப்பிட்டதாவது :—

..ாடத் திட்டத்தின் இரண்டா ..து பாகம் உடனடியாக நீக்கப் ..டும்.!

சென்னையிலுள்ள இந்திப் பள்ளி, இந்தி பேசும் மக்களின் நலனுக்காகத் தொடர்ந்து நடைபெறும்.

மாவட்டங்களில் இந்தி பயின்று வரும் மாணவர்கள், வேறு எந்த மொழி கற்பிக்கப்படுகின்றதோ அதைத்தான் கற்கவேண்டும்.

சட்டமன்றத் தீர்மானத்தினுல் இந்த மாநிலத்தில் மத்திய அரசு நிர்வாகத்தின்கீழ் உள்ள இம் மாதிரி பள்ளிகளில், 'வட்டார மொழி கற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்' என்று மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது; இதுவரையில் இதுபற்றிப் பதில் வரவில்லை.

சட்டமன்றத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக, வரும் கல்வி ஆண்டிலிருந்து எல்லா அரசினர் கல்லூரிகளிலும், எல்லா வகுப்புக்களிலும் வரலாறு, தத்துவம் போன்ற பாடங்கள் தமிழிலேயே கற்பிக்கப்படும்.

விஞ்ஞானப் பாடங்கள் சம்பந்தப்பட்டவரையில், தமிழில் புகுமுக வகுப்பில், தமிழ்ப் பயிற்று மொழியாக்கப்படும்.

உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புக்களை நீக்கம் செய்வது பற்றி இன்னும் ஆலோசிக்கப்படவில்லை; இதுபற்றி விரைவில் ஆலோசிக்கப்படும்.

இந்திப் பிரசார சபை ஒரு தனிப்பட்ட நிறுவனம்; அதில் அரசு தலையிடாது — தலையிடவும் முடியாது. மாநில அரசு அதற்கு ஏதாவது மானியம் கொடுத்து வந்தால், அதை நிறுத்தலாம்; ஆனல், மாநில அரசு, மானியம் எதுவும் தரவில்லை.

இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுவோர், உணர்ச்சி மேலிட்டு அந்த நிறுவனத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிருர்கள். அவர்களிடம் எடுத்துச் சொல்லி அக்கிளர்ச்சியைக் கைவிடும்படிச் செய்ய முடியும். வட இந்திய நகரங்களில் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன என்பதைத் தமிழ்நாட்டினர், நினைவில் கொள்ள வேண்டும்."

## ..மாழிப் பிரச்சினையில் அநீதி!

### ..ந்திரச் சட்டமன்றமும் விவாதிக்கும்

விசாகப்பட்டினம், சன. 28— ..பிப்ரவரி 12-ம் நாள் கூடவிருக் ..ம் ஆந்திரச் சட்டமன்றத்தில், ..மொழிப் பிரச்சினைபற்றிய விவா ..ம் நடைபெறும் எனத் தெரி ..றது.

"ஆந்திர மாநிலத்திற்கு எத்த ..கைய அநீதியும் ஆட்சிமொழிப் ..ரச்சினையால் ஏற்படாமல் ஆந் .. அரசு பார்ததுக்கொள்ளும்" ..ன்று ஆந்திரப் பல்கலைக்கழக ..ணவர்களிடம் ஆந்திர வரு ..ாய்த் துறை அமைச்சர் குறிப் ..பிட்டார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழித் தீர்மானத்தினுல், இந்தி பேசாத மக்கள் மத்திய அரசு நிறுவனங்களில் பணிபுரிய ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்படும் சங்கடங்களை அகற்றவேண்டும் என்று மாணவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

## அரை ஆண்டுத் தேர்வுகள் ஒத்திவைப்பு

சென்னை, சன. 29—

கல்வி நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டவுடனேயே அரை ஆண்டுப் பரீட்சைகளை நடத்த வேண்டாம் என்றும், ஒரு வாரத்துக்குப் பிறகு நடத்தும்படியும் கல்வி நிலையத் தலைமை அதிகாரிகளுக்கு மாநிலக் கல்வி இலாகா அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தொடர்ந்து டிசம்பர் 23-ந் தேதியிலிருந்து கல்வி நிலையங்கள் மூடப்பட்டதால், பரீட்சைகளை ஒத்திவைப்பது அவசியம் என்று அதிகாரிகள் கருதுவதாகத் தோன்றுகிறது.

### அமைச்சர் தகவல்

"மார்ச் மாதம் நடக்கவேண்டிய பரீட்சைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்படும்"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினுர்.

"கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதால், மாணவர்கள் வகுப்புக்கு வரும் நாட்கள் குறைந்தன; கூடுதலாக வகுப்புகளை நடத்தி இந்தக் குறைவை ஈடு செய்த பிறகு, பரீட்சைகள் நடத்தப்படும்" என்ருர் அமைச்சர்.

## சிறுவிபத்துக்குள்ளானுர் என்.வி. நடராசன்

கரூர், சன. 28—

கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், இன்று காலை 7மணியளவில் கரூருக்கு அடுத்துள்ள புலியூர்ப் பகுதியில் சிறு விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தார்.

25—1—68-ல் காரைக்குடியில் நடைபெற்ற வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பஸ் மூலம் கோவைக்கு வரும் வழியில் என். வி. என். இவ்வாறு விபத்துக்குள்ளாகியிருக்கிருர்.

பஸ் கரூருக்கு அடுத்த புலியூர் நெருங்குகையில் ஒரு பள்ளத்தில் இறங்கிவிட்டதால், பஸ் வண்டியில் பயணம் செய்த பயணிகள் அனைவருக்கும் காயமேற்பட்டிருக்கிறது.

உடன் போலீசு அதிகாரிகள் அந்த இடத்திற்கு விரைந்து காயமடைந்த அனைவரையும் கரூர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளித்தார்.

என். வி. என். அவர்களுக்கு வலது முழங்கால்—வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், காயங்கள் சாதாரணமானவையே என்றும் அறிவிக்கப்படுகிறது.

முதல் சிகிச்சைக்குப் பின் பகல் 12-மணியளவில் போலீசாரின் ஏற்பாட்டின் பேரில் திரு. என். வி. நடராசன், கோவைக்குச் சென்று, அன்று மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

## தமிழில் கல்வி பயின்ருேருக்கு எதிர் காலம்!

### தமிழக அரசின் வேலைவாய்ப்பில் முதற்சலுகை

மதுரை, சன. 29—

"தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு தேறியவர்கட்குந் தமிழக அரசின் வேலை வாய்ப்பில் முதற் சலுகை அளிக்கப்படும் நிலைமை வரும்"

என்று, தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இங்கு செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் கூறினுர்.

செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது :—

"தமிழகத்தில் தமிழே ஆட்சி மொழியாக இருந்துவருகிறது; நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டுமானுல், தமிழ் பயின்றவர்கள் இருந்தால்தான்முடியும்; அப்படி நிலைமை ஏற்படும்போது, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்களுக்கு, அரசுப் பதவிகளில் முதற் சலுகை கொடுக்க நேரிடும்."

## என். சி. சி. பயிற்சிக்குத் தமிழில் கட்டளைச் சொற்கள்

### மத்திய அரசுக்குத் தமிழக அரசு கடிதம்

மதுரை, சன. 29—

தேசீய மாணவர்ப் படையில் பயன்படுத்தப்படும் இந்திக் கட்டளைச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கிடையில் தேசீய மாணவர் படையில் இந்திச் சொற்களைக் கட்டளைகளாகப் பயன்படுத்தப்படுவதை உடனடியாக நிறுத்திவைக்க வேண்டும் என்றும் தமிழக அரசு மத்திய அரசின் தேசீய மாணவர் படையின் தலைமை அலுவலகத்திற்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும், மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வரும் என்றும் தாம் நம்புவதாகவும், தமிழகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தத் தேசீய மாணவர் படைக்கு ஆகும் செலவினை மாநில அரசுதான் செலவழிக்கிறது என்றும், இக்கட்டாய தேசீய மாணவர் படைப் பயிற்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ 65 இலட்சம் தமிழக அரசு செலவழிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்திலுள்ள கல்விக்கூடங்களில் எத்தனை மொழிகள் பயிற்றுவிக்கப்படும் என்பதை முடிவு செய்யும் பொறுப்பு மாநில அரசுக்குரியதுதான் என்றும், கல்வி, மாநிலத்தைச் சார்ந்த துறை என்பதாலேயே கல்விபற்றிய முழு அதிகாரமும் மாநில அரசினிடத்தில் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த கிழமை பள்ளிகள் திறக்கும்போது மும்மொழித் திட்டம் நீக்கப்பட்டு, இருமொழித் திட்டமே செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## உடனடியாகச் செயலுக்கு வருகிறது இரு மொழித் திட்டம்!

### ..வேலை இழக்கும் இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை ஏற்பாடு !

#### தமிழக அரசின் ஆணை விவரம்

சென்னை, சன. 29—

கடந்த சன. 23-ம் நாள் தமிழகச் சட்டமன்றம் செய்த முடிவுக் ..கேற்ப, மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டு இரு மொழித் திட்டத் ..தைச் செயல்படுத்தும் வகையில், அரசு பிறப்பித்த ஆணையில் கூறப் ..பட்டுள்ளதாவது :—

..ள்ளிகளில் கற்பிக்கும் மொழிகள் பிரச்சினையை அரசு பரிசீலித்தது; சன. 23-ம் நாள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கிணங்க, பள்ளிகளில் மும்மொழித் திட்டத்தை நீக்கம் செய்து, இரு மொழி ஏற்பாட்டின்கீழ் மொழி கற்பிக்க ஏற்பாடு செய்வதென அரசு முடிவு செய்தது.

மாநிலத்திலுள்ள பள்ளிகளில் உடனடியாகப் பின்கண்ட ஏற்பாட்டின் கீழ் மொழிகள் கற்பிக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிடுகிறது:—

முதல் பாகம் :—வட்டார மொழி.

இரண்டாம் பாகம் :— ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத வேறு ஒரு மொழி.

முதல் பாகம் முதல் வகுப்பிலிருந்தும், இரண்டாம் பாகம் மூன்ருவது வகுப்பிலிருந்தும் கற்பிக்கப்படும்.

இரு மொழிகளிலும் பரீட்சைகள், தொடர்ந்து கட்டாயமாக இருந்துவரும்.

இப்போதுள்ள இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலைகளை அளிக்க எல்லா முயற்சிகளையும் அரசு செய்யும் என்பதை தெளிவுபடுத்த அரசு விரும்புகிறது; இது சம்பந்தமான உத்தரவு தனியாக பிறப்பிக்கப்படும்.

9, 10, 11-வது வகுப்புக்களுக்கான பாட அட்டவணையில் (டைம் டேபிள்) உரிய மாறுதல்கள் செய்து மேற்கண்ட உத்தரவுகளை உடனடியாகச் செயல்படுத்தும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்.

"புதிய இருமொழி ஏற்பாட்டை செயல்படுத்துவது சம்பந்தமாக விவரமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. சுமார் 2,200 பள்ளிகளில் சுமார் 3,000 இந்தி ஆசிரியர்கள் பணிபுரிந்து வந்திருக்கிருர்கள்; மற்ற பாடங்களைக் கற்பிக்கத் தகுதியுள்ளவர்கள், உடனடியாக வேலைக்கமர்த்தப்படுவார்கள்; அம்மாதிரி தகுதி பெருதவர்கள், சொற்பகாலப் பயிற்சி அளிக்கப்பட்டு, பின்னர் வேறு தகுதியான வேலைகளில் அமர்த்தப்படுவார்கள்."

முதல் பாகத்தின்கீழ் (தாய் மொழி) இந்தி கற்பிக்கப்பட்டு வரும் இடங்களில் அந்த ஏற்பாடு தொடர்ந்து இருந்துவரும்.

சமஸ்கிருதம் சம்பந்தப்பட்ட வரையில், அது விருப்பப் பாடத்தின்கீழ் வரும். விருப்பப் பாடமாகப் பாரசீகம் உருது அல்லது சமஸ்கிருதம் படிக்க வசதி செய்யப்படலாம்.

நிர்வாக ஆணை மூலம், இந்தப் பாடங்கள் கற்பிப்பதை நீடிக்க வகை செய்யலாம்.

கீழ்த் திசை மொழி, கலைப் பள்ளிகளில்,ஒரு தனித்திட்டத்தின் கீழ் நடக்கின்றன; சம்ஸ்கிருதம் போன்ற பாடங்களைப் படிக்க அவை தொடர்ந்து வகை செய்யலாமெனத் தெரிகிறது

## நீதிமன்றங்களில் தமிழ்

### விரைவில் முதல் நடவடிக்கை !

கோவை, சன. 28—

"சட்டங்களைத் தமிழில் கொண்டுவருவதற்கான பணிகளை மாநில அரசு விரைவாகச் செய்துவருகிறது"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் இங்கு தெரிவித்தார்.

நீதி மன்றங்களில் சாட்சியங்களைத் தமிழிலேயே பதிவு செய்வதற்கு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஒப்புக்கொண்டிருக்கிருர் என்றும், உயர் நீதிமன்றம் இதனை எப்படி நிறைவேற்றுவது என்று பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகவும் சட்ட அமைச்சர் சொன்னுர்.

"நீதிபதிகளுக்குத் தமிழ் தெரிந்திருந்தும் தமிழிலே சாட்சியங்கள் சொன்னுலும் அவைகளை ஆங்கிலத்தில் பதிவு செய்கின்ற வழக்கம் தான் தற்போது நடைமுறையில் இருக்கிறது; முதற்படியாகத் தமிழிலேயே சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்" என்றும் அவர் சொன்னுர்.

சட்டச் சொல் அகராதி தயாரிக்கப்படும் வேலை இன்னும் மூன்று திங்களில் முடிவடைந்துவிடும் என்றும், எல்லா சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் சட்ட அமைச்சர் குறிப்பிட்டார்.!

பல்வேறு சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்க முன்வருபவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## உலகத் தமிழ் மாநாட்டு சிறப்பு மலர்

### 'குறளக'த்தில் கிடைக்கும்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, அமைச்சர் மா. முத்துசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினரால் உருவாக்கப்பட்ட சிறப்பு மலர் விற்பனைக்கு வந்துவிட்டது.

சென்னை எஸ்பிளனேட்டில் புதிதாகத் திறக்கப்பட்ட 'குறளக'க் கட்டிடத்தில் இந்த மலர் கிடைக்கும்; விலை ரூ. 30.

'புகாரில் ஒரு நாள்' என்ற தலைப்பில் 10 கவிஞர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பும் கிடைக்கும்; விலை ரூ. 1.

## பயிற்று மொழியாகத் தமிழ்

### கல்லூரி முதல்வர்கள் மாநாடு கூடுகிறது

சென்னை, சன. 28—

வரும் கல்வி ஆண்டிலிருந்து எல்லா அரசினர் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் தமிழ்ப் பயிற்று மொழியாக்குவதுபற்றி விவாதிக்கவும், விஞ்ஞானக் கல்வியில் பாட நூல்கள் தயாரிப்பதுபற்றி ஆலோசிக்கவும் கல்லூரி முதல்வர்களின் மாநாடு ஒன்றைச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கூட்டியுள்ளார்; இது, பிப்ரவரி 3-ம் நாள் பிற்பகல் நடைபெறும்.

கல்வி அமைச்சர்களும், கல்வித் துறை அதிகாரிகளும் இம்மாநாட்டில் கலந்துகொள்வார்.

தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குவது சம்பந்தமான நிலைமை, இந்த மாநாட்டின் முடிவைப் பொறுத்திருக்கும்.

## முகவரி மாற்றம்

நகர் தி. மு. கழகம்,
8-பி, கல்பாலம் ரோடு,
யானைக்கல், மதுரை.

மாவட்ட தி. மு. கழகம்,
8-பி, கல்பாலம் ரோடு,
யானைக்கல், மதுரை.

எம். எம். முத்தரசு,
நகர் தி. மு. க.
துணைச் செயலாளர்,
8-பி, கல்பாலம் ரோடு,
யானைக்கல், மதுரை.

இந்திக் கட்டளைச் சொற்களை அகற்ற மறுத்ததால்

கருநாடக என்.சி.சி. மாணவர்கள் நடவடிக்கை

# தேசிய கொடிக்கு

## மரியாதை செலுத்த மறுப்பு!

### குடியரசு விழாவில் இந்தி எதிர்ப்பு முழக்கம்

பெங்களூர், சன. 29—

குடியரசு நாள் அணிவகுப்பில் கலந்துகொண்ட மெர்க்காரா மாணவர் தேசியப் படை (என்.சி.சி.)-யைச் சேர்ந்த மாணவர்களும்—மாணவிகளும், அதிகாரி ஒருவரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டபோது, அதற்கு மரியாதை செலுத்த மறுத்துவிட்டனர்.

விழா முடிவில், போலீசு மற்றும் இராணுவ பாண்டுகள் தேசியக் கொடி கீதத்தை இசைத்தபோதும், 'தேசியக் கீத'த்திற்கு மரியாதை தெரிவிக்க என்.சி.சி. அணியினர் மறுத்துவிட்டனர்.

**மாணவர் தேசியப் படையில், ஆங்கிலத்திற்கு மாருக இந்தியில் ஆணைச் சொற்கள் சொல்லப்படுவதை எதிர்த்தே அவர்கள் இவ்வாறு செய்துள்ளனர்.**

**மெர்க்காரா நகர இந்தி ஆதிக்க எதிர்ப்பு நடவடிக்கைக் குழுவினர், கடந்த வியாழனன்று, என். சி. சி. அதிகாரிகளை அணுகி, ஆணைச் சொற்கள் ஆங்கிலத்திலேயே சொல்லுமாறு கேட்டுக்கொண்டனர்; அதிகாரிகள் அக்கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டனர்; எனவேதான் மாணவர்கள், இந்நடவடிக்கையில் இறங்கினர்.**

இந்த அணிவகுப்பில், என்.சி.சி யைச் சேர்ந்த மாணவர் அணி இரண்டும்—மாணவியர் அணி ஒன்றும் பங்கேற்றன.

கொடியேற்றிவைத்து அதிகாரி உரையாற்றிக்கொண்டிருக்கையில், பார்வையாளர் பகுதியில் இருந்த மாணவர்கள், இடைவிடாமல் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக்கொண்டிருந்தனர்.

முன்னாள் இந்திய இராணுவத் தலைமைத் தளபதி கே. எம். கரியப்பா எவ்வளவோ கேட்டுக்கொண்டும்கூட, மாணவர்கள் அமைதிப்படவில்லை.

அணிவகுப்பு விழா முடிந்தபின், சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் நகருக்குள் வலம் வந்து, பொது இடங்கள்—கடைகள் உள்ளிட்ட பல நிலையங்களிலிருந்த எல்லா இந்தி எழுத்துக்களையும் தார் பூசி அழித்தனர்.

# தமிழில்

## கட்டளைச் சொற்கள்!

### பள்ளிகட்கு அரசு ஆணை

திருச்சி, சன. 28—

"பள்ளிகளில் உள்ள தேசிய மாணவர் படை (என்.சி.சி.) பயிற்சியிலும், பிற உடற்பயிற்சி வகுப்புக்களிலும், தமிழிலோ, ஆங்கிலத்திலோ தான் கட்டளைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்" என்று, தமிழக அரசு எல்லாப் பள்ளிகளுக்கும் ஆணை பிறப்பித்துள்ளது.

அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

### சுற்றுப்பயணம் ரத்து

சென்னை, சன. 29—

கடந்த சில நாட்களாக காய்ச்சல் கண்டுள்ளபடியால் மருத்துவர் கட்டளைப்படி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், 30—1—68 அன்று மேற்கொள்ளவிருந்த சுற்றுப் பயணத்தை ரத்து செய்துள்ளார்.

முகையூர் தொகுதியிலும் கடலூர் நகரிலும் இசைவு தந்திருந்த நிகழ்ச்சிகளுக்கு வேறு நாள் தெரிவிக்கப்படும் என்பதும் அறிவித்துக்கொள்ளப்படுகிறது.

## காயிதே மில்லத்

### குணமடைந்துவருகிறார்

கார் விபத்தில் பலத்த காயமடைந்த காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களும், மாநகராட்சி உறுப்பினர் சிலார் மியான் அவர்களும் இராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உடல்நலம் பெற்றுவருகின்றனர்.

## ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நீடிப்பு

### துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாயினர்

ஐதராபாத், சன. 29—

ஆந்திரத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

பல இடங்களில் இரயில்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சித்தூரில், வன்முறையில் ஈடுபட்ட கூட்டத்தினர்மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதனால் இருவர் மாண்டனர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தாக்குதல்களும், தீயிடும் சம்பவங்களும் நடைபெற்றுள்ளதால், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சித்தூர் நகரில் நிலைமை கட்டுக்கடங்கியிருக்கிறது. பஸ்கள் மீண்டும் ஓடுகின்றன.

தீ வைத்துக் கொளுத்தப்பட்ட பாலம் சீர் செய்யப்பட்டு 200 கெச இருப்புப் பாதை மீண்டும் அமைக்கப்பட்டது.

இரயில் போக்குவரத்து மீண்டும் துவங்கக் குறைந்தது இரண்டு நாட்கள் ஆகலாம்.

# 'சேலம் உருக்காலையை மூன்று கட்டங்களாக நிறுவலாம்'

## 'பொகாரோவுக்கு பதில் தென்னகத்தி மூன்று ஆலைகள் நிறுவுக'

### டெல்லிக்குத் தமிழக அரசு யோசனை --- அமைச்சர் அறிவிப்பு

மதுரை, சன. 28—

சேலம் உருக்குத் தொழிற்சாலைத் திட்டத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்து நிறைவேற்றலாம் என்று மத்திய அரசுக்குத் தமிழக அரசு யோசனை தெரிவித்துள்ளதாகத் தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு தெரிவித்தார்.

மதுரை—இராமநாதபுரம் வணிகக் கழகக் கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் இத்தொடர்பில் மேலும் கூறியதாவது :—

"ரு. 100-கோடி செலவிடப்பட வேண்டிய இத்திட்டத்திற்கு ஆண்டுதோறும் செலவாகக் கூடிய செலவைக் குறைக்கும் நோக்கத்துடனேயே இந்த யோசனையைத் தெரிவித்திருக்கிறோம்.

"ரு. 850-கோடி செலவிட வேண்டிய பொக்காரோ உருக்காலைத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அந்தத் தொகையைக் கொண்டு, சேலம், ஹாஸ்பெட், விசாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களிலும் சிறிய உருக்காலைகளை ஒரே நேரத்தில் நிறுவும்படி மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். இந்த மூன்றுக்கும் சேர்ந்து செலவாகும் மொத்தத் தொகை, பொக்காரோ திட்டத்திற்குச் செலவாகக்கூடிய தொகையை விடக் குறைவாகவே இருக்கும்.

"மாநில அரசே, சேலம் உருக்காலையை நிறுவ அனுமதி கேட்டுக் கடிதம் எழுதியிருந்தும், இதுவரை பதில் எதுவும் வரவில்லை."

# சட்டமன்றத்தை உடனே கூட்டுங்கள்

## மத்திய அரசு மொழிக்கொள்கைக்கு எதிர்ப்புக்காட்டுவீர்

### அநீதி அகற்றப்பட நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி தேவை

'அதுவரையில் வகுப்புக்களுக்குச் செல்வதாக இல்லை' --- ஆந்திர மாநில முதலமைச்சருக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் அறிவிப்பு

விசாகப்பட்டினம், சன. 29—

முதலமைச்சர், சட்டமன்றத்தின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி மத்திய அரசின் மொழிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வரையில், வகுப்புகளுக்குச் செல்லாமல் இருந்து, மொழிப் பிரச்சினையில் தங்களுக்கு இருக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்வதென்று, ஆந்திரப் பல்கலைக் கழக மாணவர் கழகங்களின் கூட்டுச் செயற்குழு முடிவு செய்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று கூடிய இக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 16 கருத்துக்கள் அடங்கிய நீண்ட தீர்மானத்தில்,

"மொழிச் சட்டத்தால் இந்தி பேசாதவர்கட்கு ஏற்பட்டுள்ள அநீதியையும், பாரபட்சத்தையும் நீக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதாக உறுதிமொழியளிக்க வேண்டும்"

என்று முதலமைச்சருக்குக் கோரிக்கை விடப்பட்டது.

"இத்தகைய உறுதிமொழி அளிக்கப்படவில்லையானால், ஆந்திரத்துப் பொதுமக்களுக்கு இந்தப் பிரச்சினையினை விளக்க வேண்டியது எங்கள் கடமையாகும். அந்தக் கடமையில் நாங்கள் ஈடுபடுவோம்"

என்று அந்தத் தீர்மானம் கூறுகிறது.

"நாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக இருக்க விரும்பவில்லை"

என்றும் அது எடுத்துக்காட்டியுள்ளது.

தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

"அண்மையில் நாடாளுமன்றத்தில் மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இந்தி பேசாத பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு எண்ணற்ற இடர்பாடுகளை ஏற்படுத்துகிறது; முன்னாள் தலைமையமைச்சர்கள் இருவர் அளித்த உறுதிமொழியைச் சட்டபூர்வமாக்குவதற்குப் பதிலாக, அதனை அறவே இல்லாமற் செய்துவிட்டிருக்கின்றனர்."

"அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா மொழிகளையும் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்வதுடன், மத்திய அரசின் ஊழியர் தேர்வுக்கான பரீட்சையில், இந்த மொழி அனைத்துக்கும் சமவுரிமை அளிக்கவேண்டும். இந்தப் பரீட்சையை ஆங்கிலத்திலும், வேறு ஏதேனும் ஒரு தேசிய மொழியிலும் எழுத ஏற்பாடு செய்யவேண்டும்; பரீட்சை எழுதுபவர்கள் பாதி ஆங்கிலத்திலும், பாதி தாங்கள் விரும்பும் ஒரு தேசிய மொழியிலும் எழுத அனுமதிக்க வேண்டும்."

## ஆந்திர மாநிலத்தில் அண்ணா

### பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

குண்டூர் இரயில் நிலையத்தில் சிறப்புமிக்க வரவேற்பு

குண்டூர், சன. 29—

இந்திய–இரஷ்யப் பண்பாட்டுச் சங்கத் தேசீய விழாவில் கலந்துகொள்வதற்காக நேற்று காலை இரயில் மூலம் குண்டூருக்கு வந்து சேர்ந்த தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு இரயில் நிலையத்தில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய–இரஷ்யப் பண்பாட்டுச் சங்கத்தார் மட்டுமன்றி நகர மக்களும் பெரும் அளவில் கலந்துகொண்டு அண்ணா அவர்களை வரவேற்றனர்.

ஆந்திர மாநில அரசின் உத்தரவின்மீது அண்ணா அவர்கள் அரசாங்க விருந்தினராக நடத்தப்பட்டார்.

அண்ணா அவர்களுடன் சென்னை மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., ஆகியோரும் வந்திருந்தனர்.

இந்திய–இரஷ்யப் பண்பாட்டுக் கழகத்தின் மாநாட்டை, அண்ணா அவர்கள் தொடங்கி வைத்தார்.

வழக்கறிஞர்கள் சங்கம் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டார்.

குண்டூர் நகராட்சிமன்றம் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு நன்றி தெரிவித்துப் பேசினார்.

அன்று இரவு குண்டூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அரியதோர் உரையாற்றினார்.

அண்ணா அவர்கள், இன்றும் (திங்கள்) ஆந்திரத்தில் சுற்றுப்பயணம் செய்கிறார்; பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

# சித்தூர் நகராட்சித் தலைவருடன் கழகத் தோழரும் கைது

## தடுப்புக் காவல் சட்டப்படி நடவடிக்கை!

### இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் எதிரொலி

சித்தூர், ஜன. 28—

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி, சித்தூர் நகராட்சித் தலைவர் திரு. எம்.எஸ். இராசேந்திரன், நகராட்சி உறுப்பினர் திரு. கே.எம். எர்ரய்யா (தி.மு.க.), திரு. எம்.எஸ். ஹிலால், திரு. பி. நரசிம்ம குப்தா, மற்றும் இரு நகராட்சி உறுப்பினர்களைப் போலீசார் தடுப்புக் காவல் சட்டப்படி கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

# வானொலியின் இந்தி வெறி!

## தென்னக எம்.பி.-க்கள் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, சன. 28—

வெளிநாட்டுத் தலைவர்களான டிட்டோவும், கோசிஜினும் டில்லிக்கு வந்ததையொட்டி, வானொலியுல் ஒலிபரப்பப்பட்ட வர்ணனைச் செய்தி இந்தியில் மட்டுமே இருந்ததற்கு, தென்னாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

எப்போதும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருந்துவந்த இந்த வர்ணனைச் செய்தி, இப்போது வழக்கத்துக்கு மாருக, இந்தியில் மட்டுமே ஒலிபரப்பப்பட்டதைச் சுட்டிக்காட்டி அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.